முருகப்பெருமான் துணை

**மகான் பூனைக்கண்ணார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.05.2022**, வியாழக்கிழமை

1. சிவராஜ யோகியே அரங்கா
சித்திகள் அருளும் தேசிகா
அவனி காக்கும் ஆறுமுகனார்
ஆற்றலாக வந்த குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது விடைதிங்கள்
வரமென விய திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 12 ம் நாள், 26.05.2022 வியாழக்கிழமை)
வழங்குவேன் பூனைக்கண்ணார் யானும்
3. யானும் அருளாசி தன்னை
உலகோர் பாதுகாப்பு பெற வேண்டி
ஞான தேசிகன் கேட்க அருள்வேன்
ஞானமாக அரங்கன் வந்த
4. வந்தநல் நோக்கம் அறிந்து
வையகத்தார் பிரணவக்குடிலில்
வந்திணைந்து ஞானம் பயில
வரமெனும் அரங்கன் சக்தியான
5. சக்தியான தீட்சை ஏற்று
சரவணச்சுடரை தரிசித்து
பக்தி சித்தி குறையாதவண்ணம்
பணிந்து தொடர் வழிபாடு செய்ய
6. செய்யவே தொடருகின்ற வினை
செய்வினை ஏவல் கருமங்கள்
அய்யமுற்று அனைத்தும் விலகும்
ஆபத்தின்றி பாதுகாப்புப் பெருகும்
7. பெருகவே தரும வழிகள் தன்னை
பேதமற உலகமக்கள் ஏற்று
முருகா என கடைப்பிடித்துவர
முழுமை தரும் ஞானம் கிட்டி
8. கிட்டியே எந்தச் சூழலிலும்
குழப்பம் அச்சம் வாராதபடி
தட்டாது சர்வபலம் காணும்
தவறான வழி செல்லா அமைதி
9. அமைதி திடம் மனத்தெளிவுபட
அனைத்தும் குருவே எனும் அறிவு
அமைதி தெளிவு கிட்டியே
ஆபத்தின்றி வாழ்ந்திட நேரும்

10. நேருமை குன்றா நல் ஆற்றல்
நீதிமான்கள் எனும் சக்திபட
பெருமை மிக்க வழிகள் கூட்டி
பிரம்ம ரகசியமும் அறிய நேரும்

11. அறிவைத் தரும் அரங்கன் வழி
ஆபத்து இடைகண்டம் நீக்கி
அறிவுடன் அழியாமை தரும் வழியாகும்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–